## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | Crl.M.P.No. 2395/2024 |
| Prosecution Witness | : | **ம.சா.8** |
| Name | : | **கண்ணன்** |
| Father's / Husband Name | : | **சிதம்பரம்** |
| Address | : | **அம்மாபாளையம்** |
| Age | : | 60/2025 |

**<u>தேதி : 07.04.2025</u>**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்துவருகிறேன். புகார்தாரர் துரைராஜ் என்பவரை தெரியும். எங்கள் ஊரில் 13.05.2018 ஆண்டு மாரியம்மன்கோவில் திருவிழாவிற்காக பூக்கூடை எடுத்துக்கொண்டு இரவு 10.30 மணிக்கு நானும், கருணாநிதி, செல்லமுத்து, கனகராஜ், நாகராஜ், சிதம்பரம், துரைராஜ் மற்றும் எங்கள் தெருவை சேர்ந்த 10 பேர்கள் நடந்துசென்றுக்கொண்டிருந்தபோது எங்களை வெள்ளைச்சாமி, பாஸ்கர், குமார், கலைச்செல்வன், நீலவேணி, கனிமொழி, மலர்க்கொடி மற்றும் சிலர் வழிமறித்து இந்த பாதை எங்களுக்கு சொந்தமானதா அல்லது குண்டுமணி வீட்டிற்கு சொந்தமான பாதையா என்று பதில் சொல்லிவிட்டு போங்கள் என்று சொன்னார்கள். நாங்கள் திருவிழா முடிந்தபிறகு அதைபற்றி பேசிக்கொள்ளலாம் என்று சொன்னோம். துரைராஜ் திருவிழா நடந்துகொண்டிருப்பதால் திருவிழா முடிந்தபிறகு பேசிக்கொள்ளலாம் என்று சொன்னார். அப்போது வெள்ளைச்சாமி அசிங்கமாக திட்டி தடியால் துரைராஜை அடித்தார். மேலும் குமார், பாஸ்கர்,

கலைச்செல்வன், நீலவேணி, மலர்க்கொடி, கனிமொழி ஆகிய அனைவரும் சேர்ந்து அடித்தார்கள். துரைராஜ்க்கு தலையில் அடிப்பட்டது. அவரை கீழே தள்ளி தாக்கினார்கள். அசிங்கமாகக பேசினார்கள். வெட்டிவிடுவோம், கொலை செய்துவிடுவோம் என்று மிரட்டினார்கள். நானும், என்னுடன் வந்திருந்தவர்களும் சண்டையை விலக்கிவிட்டோம். துரைராஜை அவருடைய மனைவி அம்மாபாளையம் மருத்துவமனையில் சேர்த்தார். திருவிழா நடந்துகொண்டிருந்ததால் பேசி தீர்த்துகொள்ளலாம் என்று இருந்தோம். வெள்ளைச்சாமி குடும்பத்தை சேர்ந்தவர்கள் புகார் கொடுத்துவிட்டார்கள். திருவிழா நடந்துகொண்டிருந்தபோது போலீஸார் வந்து விசாரித்தார்கள். திருவிழா முடிந்தபிறகு எங்கள் தரப்பில் துரைராஜ் புகார் கொடுத்தார்.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.